திரு. வெ. அரங்கராசன் : தலைவரவர்களே, அதைப் போல கூட்டுறவுச் சங்கங்களிலே கையாடல் செய்யும் தலைவர்கள் மீண்டும் பொறுப்பில் இருக்கக்கூடாது என்று அரசு நிபந்தனை விதிக்குமா ?

மாண்புமிகு திரு. கே. ஏ. கிருஷ்ணசாமி : தலைவரவர்களே, புதிய கூட்டுறவுச் சட்டத்திற்கான ஆய்வு நடைபெற்று வருகிறது. சட்டம் வரும்போது இதுபற்றி ஆலோசிக்கப்படும்.

திரு. சோ. அழகர்சாமி : தலைவரவர்களே, இந்தமாதிரியாக கூட்டுறவுச் சங்கங்களில் கையாடல்கள் நடைபெறுவதும், அதைக் கண்டுபிடித்து வழக்குத் தொடருவதில் தாமதம் ஏற்படுவதற்கும் காரணம் இரண்டு ஆண்டுகள் கழிந்துதான் தணிக்கை நடைபெறுகிறது. ஆகவே, இப்படிப்பட்ட தவறுகள் நடைபெறாமல் இருக்க அந்த அந்த ஆண்டிலேயே தணிக்கை செய்வதற்கு அமைச்சரவர்கள் ஏற்பாடு செய்வார்களா ?

மாண்புமிகு திரு. கே. ஏ. கிருஷ்ணசாமி : தலைவரவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்களுடைய உணர்வுகள் கருத்தில் கொள்ளப்படும்.

### சேயூரில் பட்டு வளர்ப்பு ஆராய்ச்சி நிலையம் அமைக்கும் திட்டம்.

*வினா எண். 813:—திரு. எம். ஆறுமுகம்: மாண்புமிகு ஊரகத் தொழில் அமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா—

அவினாசி யூனியன் சேயூரில் பட்டு வளர்ப்பு ஆராய்ச்சி நிலையம் ஒன்று அமைக்க அரசிடம் செயற்குறிப்பு உள்ளதா?

மாண்புமிகு திரு. கே. ஏ. கிருஷ்ணசாமி : இல்லை.

### கும்பக்கரையை சுற்றுலாத் தலமாக்கும் திட்டம்.

*வினா எண். 814:—திரு. கா. கோபாலகிருஷ்ணன்: மாண்புமிகு செய்தி அறநிலைய அமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா—

பெரியகுளம் தாலுக்காவிலுள்ள கும்பக்கரையை சுற்றுலாத் தலமாக்கவும், பயணிகள் தங்குவதற்குக் குறைந்த வாடகையில் ஓய்வில்லங்கள் கட்டவும் செயற்குறிப்பு உள்ளதா?

1981 ஏப்ரல் 21]

மாண்புமிகு திரு. ஆர். எம். வீரப்பன் : தற்சமயம் இல்லை.

திரு. கா. கோபாலகிருஷ்ணன் : தலைவரவர்களே, வறட்சி ஏற்பட்டாலும், எவ்வளவு தண்ணீர் தட்டுப்பாடு ஏற்பட்டாலும் அந்த நீர்வீழ்ச்சியில் தண்ணீர் வற்றாமல் எப்போதும் ஒரேமாதிரி யாக இருக்கிறது. அதைச் சுற்றுலாப் பயணிகள் கண்டு களிக்கின்ற வகையில் அதை ஒரு சுற்றுலா இடமாக்க அரசு மீண்டும் பரிசீலனை செய்யுமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. ஆர். எம். வீரப்பன் : தலைவரவர்களே, கும்பக்கரை என்ற மலைப்பகுதி மதுரை மாவட்டத்தின் உட்பகுதி யிலே இருக்கிறது. அங்கே அருவி இருக்கிறது என்பதைத் தவிர வேறு எந்த சிறப்பும் இல்லை. ஆகவே, பொதுவாக பயணிகள் அடிக்கடி போவது சாத்தியமாக இல்லை. ஆகையால் இது பரிசீலனைக்கு எடுத்துக் கொள்ளப்படவில்லை.

திரு. ராஜ்குமார் விஜயரெகுநாத தொண்டமான் : தலைவ ரவர்களே, இப்போது வெள்ளக்கரையிலிருந்து கும்பக்கரை, கொடைக்கானலையும் சேர்த்து ஒரு ரோடு போட 47 இலட்சம் ரூபாய் அரசாங்கம் 'சாங்ஷன்' செய்திருக்கிறது. இந்த ரோடு போடப்பட்ட பிறகு சுற்றுலாப் பயணிகள் அடிக்கடி இந்தப்பாதை யிலே வருவதற்கு வாய்ப்பு இருக்கிறது. அதைக் கருத்திற் கொண்டு அங்கே சுற்றுலா மாளிகை கட்ட அரசு முன்வருமா?

மாண்புமிகு திரு. ஆர். எம். வீரப்பன் : தலைவரவர்களே, இப்படிப்பட்ட மலைச்சாலை அமைத்த பிறகு போக்குவரத்து வசதி ஏற்படுவதைத் கணக்கிலே எடுத்துக் கொண்டு அதன் பிறகுதான் பரிசீலிக்க முடியும்.

திரு. என். எஸ். வி. சித்தன் : தலைவரவர்களே, மதுரை மாவட்டத்தின் மேற்குப் பகுதியில் இருக்கிற இந்த கும்பக்கரை அருவியானது அந்தப்பகுதியில் இருக்கிற ஏழை எளிய மக்களுக்குக் குற்றாலம் அருவியைச் சென்று பார்க்க முடியாத மக்களுக்குக் குற்றாலம் அருவியைக் கண்டு களிப்பதைப் போன்ற ஒரு வரப் பிரசாதமாக அமைந்திருக்கிறது. மாண்புமிகு அமைச்சரவர்கள் இதுவரை அந்த அருவியை வந்து பார்க்காவிட்டாலும் இனிமே லாவது அதைப் பார்வையிட்டு, இப்போது திட்டம் இல்லாவிட்டா லும் இனிமேலாவது அந்த ஏழை எளிய மக்கள் குற்றாலத்தை போல கண்டு களிக்கும் வகையில் மேம்பாடு செய்து, ஒரு சுற்றுலா இடமாக ஆக்க திட்டமிடுவார்களா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. ஆர். எம். வீரப்பன் : தலைவரவர்களே மாண்புமிகு உறுப்பினர்கள் அனைவரும் மிகுந்த அக்கரையோடு சொல்லிக்கொண்டிருக்கின்ற காரணத்தால் எந்த அளவுக்குச் சாத்தியமோ அந்த அளவுக்கு அரசு பரிசீலித்து அதிலே எந்தவித மான அபிவிருத்தி செய்ய இயலும் என்பதை ஆராய்ந்து அதற்கு முயற்சி செய்யும்.

திரு. கே. எம். எஸ். சுப்பிரமணியன் : தலைவரவர்களே, மதுரை மாவட்டத்தின் மேற்குப் பகுதியிலே இந்த கும்பக்கரை அருவியும், சுருளியாறு நீர்வீழ்ச்சியும் மிகப் பிரசித்திப் பெற்ற நீர்வீழ்ச்சிகளாக இருக்கின்றன. ஆகவே இந்த இரண்டு நீர் வீழ்ச்சிகளையும் இணைத்து ஒரு சுற்றுலாப் பேருந்து விட அரசு முயலுமா என அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. ஆர். எம். வீரப்பன் : தலைவரவர்களே, பேருந்து விடுவதற்கு சாலை வசதிகள் வேண்டும். அதற்குப் பல இலட்சம் ரூபாய் செலவிட வேண்டும். பேருந்து விடுவதினால் மட்டும் அது சுற்றுலா வளர்ச்சியாக அல்லது சுற்றுலா ஸ்தலமாக மாறிவிடாது.

பேராவூரணித் தொகுதி 'மனோரா'வை சுற்றுலா மையமாக்கல்.

*வினா எண். 815—திரு. எம். ஆர். கோவேந்தன் : மாண்புமிகு செய்தி அறநிலைய அமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடை யளிப்பாரா—

தஞ்சை மாவட்டம் பேராவூரணித் தொகுதியில் மன்னர் சரபோஜியால் கட்டப்பட்ட 'மனோரா'வைச் சுற்றுலாத் துறையில் எடுத்துக் கொண்டு "சுற்றுலா மையம்" ஆக்கும் திட்டம் எந்த நிலையில் உள்ளது?

மாண்புமிகு திரு. ஆர். எம். வீரப்பன்: தஞ்சை மாவட் டத்தில் "மனோராவையும்" "கல்லணையையும்" மாவட்ட உலாத் தலங்களாக மாற்றுவதற்கு ஆணை பிறப்பிக்கப் பட்டுள்ளது. தற்போது இத்திட்டத்தின் முதல் கட்டத்தில் கல்லணையை மாவட்ட உலாத்தலமாக மாற்ற முடிவெடுக்கப்பட்டு ஆரம்பப் பணிகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன. இத்திட்டத்தின் இரண்டாவது கட்டத்தில் மனோராவை ஒரு மாவட்ட உலாத் தலமாக மாற்றும் முயற்சிகள் மேற்கொள்ளப்படும்.

[முற்பகல் 9—10]

திரு. எம். ஆர். கோவேந்தன் : தலைவரவர்களே, நாளுக்கு நாள் மிக மோசமாக பழுதடைந்து கொண்டிருக்கும் மனோராவை